(16)

# சுகாதார அமைச்சு
# துணை மருத்துவ சேவையின் பயிற்சி நெறிகளுக்கு மாணவர்களை ஆட்சேர்த்தல்– 2024

சுகாதார அமைச்சின் துணை மருத்துவ சேவையின் பின்வரும் கற்கை நெறிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கை பிரஜைகளிடமிருந்து 2024.03.22 ஆம் திகதி முதல் 2024.04.25 ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த அமைச்சின் உத்தியோகபூர்வ இணையதளத்தின் (www.health.gov.lk) ஊடாக மாத்திரமே இதற்காக விண்ணப்பிக்க முடியும்.

**1. கவனிக்க வேண்டியவை:**

1.1. ஒரு விண்ணப்பதாரர் ஒரு விண்ணப்பத்தை மட்டுமே சமர்ப்பிக்க முடியும். ஒன்றுக்கும் மேற்பட்ட விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரர்களின் அனைத்து விண்ணப்பங்களும் எவ்வித அறிவிப்புகளும் இன்றி நிராகரிக்கப்படும். 2018, 2019 மற்றும் 2020 ஆகிய மூன்று வருடங்களிலும் க.பொ.த (உ. தர) பரீட்சையில் சித்தியடைந்திருந்தாலும் ஒருவருக்கு ஒரு விண்ணப்பத்தை மட்டுமே சமர்ப்பிக்க முடியும். அத்தகைய விண்ணப்பதாரர்கள் தமது விருப்பத்திற்கு ஏற்ப தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு வருடத்திற்காக மாத்திரம் விண்ணப்பிக்கலாம். இரண்டு அல்லது மூன்று வருடங்களுக்காகவும் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கக்கூடாது. அவ்வாறின்றி இரண்டு அல்லது மூன்று வருடங்களுக்காகவும் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரர்களின் அனைத்து விண்ணப்பங்களும் எவ்வித அறிவிப்புகளும் இன்றி நிராகரிக்கப்படும்.

1.2. கடந்த பல ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட ஆட்சேர்ப்பு தொடர்பாக அவதானம் செலுத்தும் போது, ஒரு மாணவர் அரசாங்கத்தின் இலவசக் கல்விச் சலுகையின் கீழ் பல்வேறு அரச நிறுவனங்களினால் நடாத்தப்படும் கற்கை நெறிகள் பலவற்றில் இணைவதால், தகுதியுடைய பல மாணவர்களுக்கு இதுபோன்ற ஒரு வாய்ப்புக்கூட கிடைப்பதில்லை என்பது அவதானிக்கப்பட்டது. இது தவிர இந்த நிலை காரணமாக அரசாங்கத்தின் பணம் வீண் விரையமாகி வருவதுடன், பாடநெறியின் இறுதியில் எதிர்பார்த்த எண்ணிக்கையில் பயிற்றுவிக்கப்பட்ட தொழில்வல்லுனர்களின் எண்ணிக்கை இல்லாத காரணத்தால் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் திட்டமிட்ட இலக்குகளை அடைய முடியாதுள்ளது. எனவே, மேற்படி நிலைமையைக் குறைப்பதற்கு ஒவ்வொரு விண்ணப்பதாரர்களுக்கும் ஒரு சந்தர்ப்பத்தையாவது வழங்குவதற்குத் தேவையான ஏற்பாடுகள் இந்த வர்த்தமானி அறிவித்தலின் பந்தி இலக்கம் 6 இல் வெளியிடப்பட்டுள்ளன. அதன்படி, இலக்கம் 6.1 முதல் 6.5 வரையிலான துணைப் பந்திகளில் விரிவாக குறிப்பிடப்பட்டுள்ளவாறு தகுதியற்ற ஒருவர் இதற்காக விண்ணப்பித்தல் கூடாது. எவ்வாறாயினும், அத்தகைய தகுதியற்றவர்கள் இதற்கு விண்ணப்பித்து, பின்னர் கண்டறியப்பட்டால், வர்த்தமானி அறிவித்தலின் துணைப் பந்தி 7.3 இன்படி அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

1.3. கடந்த ஆட்சேர்ப்புகளில், உண்மைக்குப் புறம்பான தகவல்கள் (தவறான பரீட்சை ஆண்டுகள், பாடங்கள், பெறப்பட்ட மதிப்பெண்கள் போன்றவை) உள்ளிட்டு விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளதுடன், சில விண்ணப்பதாரர்கள் பொய்யான தகவல்களை உள்ளிட்டு தயாரிக்கப்பட்ட சான்றிதழ்கள் நேர்முகப் பரீட்சைக்கு சமர்ப்பித்துள்ளமையும் அவதானிக்க முடிந்தது. இது ஒரு பாரிய தவறாகும். எனவே, எந்தவொரு விண்ணப்பதாரியும் அவர் சமர்ப்பிக்கும் இணையவழி விண்ணப்பத்தில் தவறான தகவல்களை உள்ளிடக்கூடாது. தவறான தகவல்களை உள்ளிட்டு சமர்ப்பிக்கப்படும் அனைத்து விண்ணப்பங்களும் எவ்வித அறிவிப்புகளும் இன்றி நிராகரிக்கப்படும் என்பதுடன், அத்தகைய விண்ணப்பதாரர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டு, அவர்களின் பெயர்கள் மீண்டும் அரச சேவைக்கு இணைய முடியாதவர்களின் கருப்புப் பட்டியலில் சேர்க்கப்படும்.

1.4. ஒவ்வொரு விண்ணப்பதாரரும் முதலில் இந்த வர்த்தமானி அறிவித்தலில் மற்றும் இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இணையவழி விண்ணப்பத்தை பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை நன்றாக படித்துப் புரிந்து கொண்டு, இந்த கற்கைநெறிக்கான விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கத் தகுதியானவரா என்பதை உறுதிப்படுத்தல் வேண்டும். அதன் பின்னர் வர்த்தமானி அறிவித்தலின் 8.4 பந்தியின்படி, எந்தவொரு இலங்கை வங்கிக்கிளையில் 1000/= பணத்தை செலுத்தி பெறப்பட்ட பற்றுச்சீற்று, 10.4, 10.5 மற்றும் 10.6 ஆகிய பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை தயார்செய்து கொண்டு விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்வதன் மூலம் விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கான செயல்முறையை வெற்றிகரமாக மேற்கொள்ள முடியும்.

**02. விண்ணப்பங்கள் கோரப்படும் கற்கை நெறிக்கள் பற்றிய தகவல்கள் :**

| குறியீட்டு இல | சேவை | பயிற்சி நெறியின் பெயர் | பயிற்சி காலம் | பயிற்சி நெறி வழங்கப்படும் மொழி |
|---|---|---|---|---|
| 1. | துணை மருத்துவ சேவை | பாடசாலை பற்சிகிச்சையாளர் | 02 வருடங்கள் | ஆங்கிலம் |
| 2. | | சுகாதார பூச்சியியல் அலுவலர் | 02 வருடங்கள் | ஆங்கிலம் |
| 3. | | இதயத்துடிப்பு பதிவாளர் | 02 வருடங்கள் | ஆங்கிலம் |
| 4. | | பொது சுகாதார ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் | 1 ¼ வருடங்கள் | ஆங்கிலம் |
| 5. | | மருந்து கலவையாளர் | 01 வருடங்கள் | ஆங்கிலம் |

அட்டவணை இலக்கம் 01

**03. பதவி தொடர்பான கல்வி மற்றும் பிற விஷேட தகைமைகள் :**

| தொடர் இலக்கம் | பயிற்சி கற்கைநெறி | க.பொ.த.(சா.தர) தகைமை | க.பொ.த. (உ.தர) தகைமை | பயிற்சிக்கான பிற தகைமைகள் மற்றும் விஷேட தகைமைகள் |
|---|---|---|---|---|
| 1 | பாடசாலை பற்சிகிச்சையாளர் | சிங்கள மொழி / தமிழ்மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் குறைந்தபட்சம் திறமை சித்தியுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆங்கிலம் உட்பட ஆறு (06) பாடங்களில் க.பொ.த (சா.த) சித்தியடைந்திருத்தல் | 2018 ஆம் ஆண்டில் அல்லது 2019 ஆம் ஆண்டின் (பழைய பாடத்திட்டம்) அல்லது 2019 ஆம் ஆண்டின் (புதிய பாடத்திட்டம்) அல்லது 2020 ஆம் ஆண்டின் (பழைய பாடத்திட்டம்) அல்லது 2020 ஆம் ஆண்டின் (புதிய பாடத்திட்டம்) ஆகிய பரீட்சைகளில் ஒன்றில் க.பொ.த (உ.தர) பரீட்சையில் **உயிரியல்** பாடத்தில் திறமை சித்தியுடன் இரசாயனவியல், பௌதீகவியல், விவசாயவியல் ஆகிய பாடங்களில் இரண்டு (02) பாடங்களுடன் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் | 2024.04.25 ஆம் திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.<br><br>பெண்கள் மாத்திரம் விண்ணப்பிக்கலாம்.<br><br>உயரம் 4 அடி 10 அங்குலம் அல்லது அதற்கு மேல் இருத்தல் வேண்டும்.(147.3 CM)<br><br>விவாகம் ஆகாதவராக இருக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | சுகாதார பூச்சியியல் அலுவலர் | சிங்கள மொழி / தமிழ்மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் குறைந்தபட்சம் திறமை சித்தியுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆங்கில மொழி உட்பட ஆறு (06) பாடங்களில் க.பொ.த (சா.த) சித்தியடைந்திருத்தல் | 2018 ஆம் ஆண்டில் அல்லது 2019 ஆம் ஆண்டின் (பழைய பாடத்திட்டம்) அல்லது 2019 ஆம் ஆண்டின் (புதிய பாடத்திட்டம்) அல்லது 2020 ஆம் ஆண்டின் (பழைய பாடத்திட்டம்) அல்லது 2020 ஆம் ஆண்டின் (புதிய பாடத்திட்டம்) ஆகிய பரீட்சைகளில் ஒன்றில் க.பொ.த (உ.தர) பரீட்சையில் **உயிரியல்** பாடத்தில் திறமை சித்தியுடன் இரசாயனவியல், பௌதீகவியல், விவசாயவியல் ஆகிய பாடங்களில் இரண்டு (02) பாடங்களுடன் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் | 2024.04.25 ஆம் திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.<br><br>ஆண்கள் மாத்திரம் விண்ணப்பிக்கலாம். |
| 3 | இதயத்துடிப்பு பதிவாளர் | சிங்கள மொழி / தமிழ்மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் குறைந்தபட்சம் திறமை சித்தியுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆங்கில மொழி உட்பட ஆறு (06) பாடங்களில் க.பொ.த (சா.த) இல் சித்தியடைந்திருத்தல் | 2018 ஆம் ஆண்டில் அல்லது 2019 ஆம் ஆண்டின் (பழைய பாடத்திட்டம்) அல்லது 2019 ஆம் ஆண்டின் (புதிய பாடத்திட்டம்) அல்லது 2020 ஆம் ஆண்டின் (பழைய பாடத்திட்டம்) அல்லது 2020 ஆம் ஆண்டின் (புதிய பாடத்திட்டம்) ஆகிய பரீட்சைகளில் ஒன்றில் க.பொ.த (உ.தர) பரீட்சையில் **உயிரியல்** பாடத்தில் திறமை சித்தியுடன் இரசாயனவியல், பௌதீகவியல் ஆகிய இரண்டு (02) பாடங்களுடன் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் | 2024.04.25 ஆம் திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.<br><br>ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். |
| 4 | பொது சுகாதார ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் | சிங்கள மொழி / தமிழ்மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் குறைந்தபட்சம் திறமை சித்தியுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆங்கில மொழி உட்பட ஆறு (06) பாடங்களில் க.பொ.த (சா.த) இல் சித்தியடைந்திருத்தல் | 2018 ஆம் ஆண்டில் அல்லது 2019 ஆம் ஆண்டின் (பழைய பாடத்திட்டம்) அல்லது 2019 ஆம் ஆண்டின் (புதிய பாடத்திட்டம்) அல்லது 2020 ஆம் ஆண்டின் (பழைய பாடத்திட்டம்) அல்லது 2020 ஆம் ஆண்டின் (புதிய பாடத்திட்டம்) ஆகிய பரீட்சைகளில் ஒன்றில் க.பொ.த (உ.தர) பரீட்சையில் **உயிரியல்** பாடத்தில் திறமை சித்தியுடன் இரசாயனவியல், பௌதீகவியல், விவசாயவியல் ஆகிய பாடங்களில் இரண்டு (02) பாடங்களுடன் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் | 2024.04.25 ஆம் திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.<br><br>ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | மருந்து கலவையாளர் | சிங்கள மொழி / தமிழ்மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் குறைந்தபட்சம் திறமை சித்தியுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆங்கில மொழி உட்பட ஆறு (06) பாடங்களில் க.பொ.த (சா.த) இல் சித்தியடைந்திருத்தல் | 2018 ஆம் ஆண்டில் அல்லது 2019 ஆம் ஆண்டின் (பழைய பாடத்திட்டம்) அல்லது 2019 ஆம் ஆண்டின் (புதிய பாடத்திட்டம்) அல்லது 2020 ஆம் ஆண்டின் (பழைய பாடத்திட்டம்) அல்லது 2020 ஆம் ஆண்டின் (புதிய பாடத்திட்டம்) ஆகிய பரீட்சைகளில் ஒன்றில் க.பொ.த (உ.தர) பரீட்சையில் **<u>இரசாயனவியல்</u>** பாடத்தில் திறமை சித்தியுடன் பௌதீகவியல், உயிரியல், இணைந்த கணிதம் ஆகிய பாடங்களில் இரண்டு (02) பாடங்களுடன் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் | 2024.04.25 ஆம் திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.<br><br>ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம் |

அட்டவணை இலக்கம் 02

**04. கற்கை நெறிக்கு தெரிவு செய்யும் முறை :**

4.1. துணை மருத்துவ சேவையின் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான நடைமுறைகள் மற்றும் அதனுடன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்கு அமைய தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும் என்பதுடன், விண்ணப்பதாரர்களின் க.பொ.த (உ.தர) Z புள்ளிகளின் அடிப்படையில், அடையாளமிட்ட கற்கை நெறிகளின் முன்னுரிமை வரிசையைக் கருத்தில் கொண்டு ஒரு பயிற்சி கற்கை நெறிக்கு மட்டுமே தெரிவு செய்யப்படும்.

4.2. கணிக்கப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கை மற்றும் பயிற்சி திறன், பயிற்சி கல்லூரிகளில் காணப்படும் வசதிகள், நாட்டின் தற்போதைய நிதி நிலைமை மற்றும் பிற விஷேட நிலைமைகள் ஆகியவற்றை கருத்தில் கொண்டு பயிற்சிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட வேண்டிய எண்ணிக்கை தீர்மானிக்கப்படும் என்பதுடன், நாடளாவிய ரீதியில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள மொத்த எண்ணிக்கை ஒவ்வொரு மாகாணத்தின் சனத்தொகையின் அடிப்படையில், சனத்தொகை விகிதாசாரத்திற்கு ஏற்ப பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மாகாணத்திலுமிருந்தும் ஆட்சேர்ப்பு செய்ய வேண்டிய எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.

4.3. அதன்பின்னர் ஒவ்வொரு மாகாணத்திலுமிருந்து ஆட்சேர்ப்பு செய்ய வேண்டிய எண்ணிக்கை உரிய மாகாணத்திலிருந்து ஒவ்வொரு பரீட்சைக்கும் விண்ணப்பித்து தேவையான குறைந்தபட்ச தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கையின் விகிதாசாரத்திற்கு பிரிக்கப்பட்டு உரிய மாகாணத்திலிருந்து ஒவ்வொரு பரீட்சையிலும் ஆட்சேர்ப்பு செய்ய வேண்டிய எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.

4.4. பின்னர் அந்த ஒவ்வொரு பரீட்சைகளில் இருந்தும் ஆட்சேர்ப்பு செய்யவேண்டிய எண்ணிக்கை அந்த பரீட்சையில் உயிரியல் விஞ்ஞான பாடத்துறையில் அல்லது பௌதீக விஞ்ஞான பாடத்துறையில் விண்ணப்பித்த, குறைந்தபட்ச தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கைக்கு விகிதாசாரமாக பிரிக்கப்பட்டு உரிய மாகாணத்திலிருந்து ஒவ்வொரு பரீட்சைக்கும் ஒவ்வொரு விடயத்துறைகளின் கீழ் அதிகூடிய Z புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர்களில் இருந்து அடையாளமிட்ட கற்கை நெறிகளின் முன்னுரிமை வரிசையையும் கருத்தில் கொண்டு மாகாண அடிப்படையில் தெரிவு செய்யப்படும்.

4.5. ஒரு குறிப்பிட்ட மாகாணத்திற்கு மேற்குறிப்பிடப்பட்டவாறு ஒதுக்கப்பட்டுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையை அந்த மாகாணத்திற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களால் நிரப்ப முடியாத பட்சத்தில் அந்த வெற்றிடங்களின் எண்ணிக்கை நாட்டின் ஏனைய மாகாணங்களுக்கிடையில் அந்த மாகாணங்களின் சனத்தொகை விகிதத்தில் மீள்பகிர்வு செய்யப்படும்.

குறிப்பு :

(அ). ஒவ்வொரு விண்ணப்பதாரரும் மேலே 4.1 பந்தியின்படி தெரிவு செய்யப்பட்ட கற்கை நெறிக்கு இணைதல் வேண்டும் என்பதுடன், வேறு கற்கை நெறிகளுக்கு இணைவதற்கோ அல்லது மாறுவதற்கோ சந்தர்ப்பம் வழங்கப்பட மாட்டாது.

(ஆ). மேலும், கற்கை நெறியில் பதிவு செய்யப்படாத மாணவர்களுக்காக மீண்டும் ஒருமுறை மாணவர்களை தெரிவு செய்வதன் மூலம் அவர்கள் ஒவ்வொரு கற்கை நெறிகளுக்கிடையே மாறிக்கொள்வதன் மூலம் ஏற்படும் நெருக்கடி நிலையை தவிர்ப்பதற்கு ஒருமுறை மாத்திரம் மாணவர்கள் தெரிவு செய்யப்படுவதுடன், எந்த கற்கை நெறிக்கும் மீண்டுமொரு முறை மாணவர்கள் இணைக்கப்பட மாட்டார்கள்.

**05. தகுதிகள் :-** அனைத்து விண்ணப்பதாரர்களும் -

5.1. இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.

5.2. விண்ணப்பதாரர்கள் நன்நடத்தை உடையவராகவும், சிறந்த உடல் மற்றும் உள ஆரோக்கியத்தைக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

5.3. விண்ணப்பதாரர்கள் தங்கள் வதிவிடத்தை உறுதிப்படுத்துவதற்கு கிராம அலுவலர் சான்றதழை சமர்ப்பித்தல் வேண்டும்.

**06. கற்கை நெறிக்கு விண்ணப்பிப்பதற்கு அல்லது இணைவதற்கு தகுதியற்றவர்கள் : -**

6.1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழுள்ள அரசாங்க பல்கலைக்கழகம் ஒன்றில்/ அரசாங்க பல்கலைக்கழக கல்லூரியொன்றில் க.பொ.த (உ.தர) தகைமைகளுடன் ஆட்சேர்ப்பு செய்யப்படும் பட்டப் படிப்பைத் தொடர்வதற்காக **"அரசாங்க இலவசக் கல்விச் சலுகைகள்"** இன் கீழ், உள்ளக மாணவராகப் பதிவு செய்தவர்கள்/ கற்றுக்கொண்டிருப்பவர்கள்.

6.2. தேசிய கல்வியல் கல்லூரியொன்றில் க.பொ.த (உ.தர) தகைமைகளுடன் ஆட்சேர்ப்பு செய்யப்படும் கற்கைக்காக பதிவு செய்தவர்கள்/ கற்றுக்கொண்டிருப்பவர்கள்.

6.3. சுகாதார அமைச்சின் கீழ் அல்லது வேறு ஏதாவது அரச நிறுவனம் அல்லது க.பொ.த (உ.தர) தகைமைகளுடன் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட முழுநேர கற்கைக்காக பதிவு செய்தவர்கள்/ கற்கையை தொடர்பவர்கள்.

6.4 மேலே 6.1, 6.2 மற்றும் 6.3 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனமொன்றில் கற்கைக்காக பதிவு செய்துள்ள மாணவர்கள் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியான பிறகு, அவர்கள் தங்கள் பதிவை இரத்து செய்தாலும், அவர்கள் இதற்காக விண்ணப்பிக்க/ இணைவதற்கு தகுதி பெற மாட்டார்கள். மேலும் வர்த்தமானி அறிவித்தல் வெளியான பிறகும்/ நேர்முகப்பரீட்சை நடாத்திய பிறகும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களுக்குரிய கற்கைகளுக்கு பதிவு செய்து பின்னர் அந்த பதிவை இரத்து செய்தாலும், அவர்களும் இந்த கற்கை நெறியில் இணைவதற்கு தகுதி பெற மாட்டார்கள்.

6.5 திருமணம் செய்தவர்கள் அல்லது விவாகரத்து செய்தவர்கள் (இது பாடசாலை பற்சிகிச்சையாளர் கற்கை நெறிக்கு மாத்திரம் பொருந்தும்)

**07. ஏனைய விடயங்கள் :**

7.1. நீங்கள் ஏதாவது பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டப்படிப்பை பூர்த்தி செய்தவராக இருந்தால், அந்தப் பட்டம் நடைமுறைப்படுத்திய திகதியானது (Effective Date) இந்த கற்கைநெறிக்கான விண்ணப்பத் திகதிக்கு அதாவது 2024.03.22 இற்கு முந்திய திகதியாக இருக்க வேண்டும்.

7.2. மேற்படி சகல நிபந்தனைகளையும் பூர்த்தி செய்திருந்தாலும் கட்டாயமாக நீங்கள் விண்ணப்பிக்கும் இந்த கற்கை நெறிகளுக்கு அனுமதிக்கப்படுவீர்கள் என இந்த வர்த்தமானி அறிவித்தலில் எந்தவொரு இடத்திலும் அல்லது பந்தியிலும் **<u>குறிப்பிப்படவில்லை</u>** என்பதை கவனத்திற் கொள்ளல் வேண்டும். குறிப்பிடப்பட்டுள்ள சகல நிபந்தனைகளைப் பூர்த்தி செய்திருந்தாலும் தகுதியைப் பெற போதுமான Z புள்ளியை பெறாத விடத்து அல்லது இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யவில்லை என்றால், அவர்கள் எவ்விதத்திலும் இப்பயிற்சிக்கு தகுதியற்றவர்களாகவே கருதப்படுவார்கள்.

7.3. மேலே 6.1, 6.2 மற்றும் 6.3 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனமொன்றில் முழு நேர கற்கைக்காக பதிவு செய்துள்ள மாணவர்கள்/ கற்கை நெறிகளை தொடர்பவர்கள் அல்லது 6.4 மற்றும் 6.5 பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதியற்றவர்கள் இதற்காக விண்ணப்பித்து, பின்னர் கண்டறியப்பட்டால் உரிய கற்கையிலிருந்து/ பதவியிலிருந்து நீக்கப்படுவதுடன் அதுவரை அரசாங்கத்தினால் அவருக்காக செலவிடப்பட்ட சகல கொடுப்பனவுகளும் அவரிடமிருந்து அறவிடப்படும். அத்துடன் அவர்களின் பெயர்கள் மீண்டும் அரசாங்க சேவையில் இணைய முடியாதவர்களின் பட்டியலில் உள்வாங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

7.4. கல்வித் தகைமைகள் மற்றும் ஏனைய சகல அனைத்து தகைமைகளும் விண்ணப்ப இறுதித்தினமான 2024.04.25 ஆம் திகதிக்கு சகல விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

7.5. மேலும், ஏதாவது கற்கை நெறிக்கு வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் இன்றி விண்ணப்பித்தால், அதனால் விண்ணப்பதாரர்களுக்கு பின்னர் ஏற்படக்கூடிய அசௌகரியங்களுக்கு இந்த அமைச்சு எந்த பொறுப்பையும் ஏற்காது.

ceylonvacancy.com

**08. விண்ணப்பிக்கும் முறை :**

8.1. மேற்படி பயிற்சி நெறிக்கு சுகாதார அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் (www.health.gov.lk) ஊடாக விண்ணப்பிக்க முடியும். அதற்காக இந்த அமைச்சின் இணையத்தளத்தில் உரிய பகுதியில் உள்ள விண்ணப்பத்தை பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும். விண்ணப்பத்தை நிரப்புவதற்கு **<u>எமது இணையத்தளத்தின் இந்த வர்த்தமானி அறிவுறுத்தலுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள</u>** அறிவுறுத்தல் படிவத்தைப் பார்க்கவும்.

8.2. ஆங்கிலத்தில் மட்டுமே விண்ணப்பம் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

8.3. மேற்படி கற்கைகளுக்கான அடிப்படைத் தகுதிகளை நீங்கள் பூர்த்தி செய்திருந்தால், நீங்கள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கற்கை நெறிகளுக்காக விண்ணப்பிக்கலாம். அவ்வாறு நீங்கள் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிப்பதாயின், இணைத்தளத்தில் காட்டப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தில் உங்கள் விருப்பத் தெரிவின்படி முன்னுரிமை வரிசையில் அந்தந்த கற்கை நெறிகளை தேர்ந்தெடுக்க வேண்டும். அவ்வாறு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை பதிவேற்றிய பிறகு, அதில் உங்கள் விருப்பத் தெரிவுக்கு ஏற்ப தெரிவு செய்து அடையாளமிட்ட <u>கற்கை நெறிகளின் வரிசை கிரமத்தை மாற்றவோ அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட கற்கை நெறிகளில் ஒன்றை அல்லது அதற்கு மேற்பட்ட கற்கை நெறிகளை திரும்பப் பெறவோ அல்லது புதிய ஒரு கற்கை நெறியை அல்லது பல கற்கை நெறிகளை சேர்க்கவோ எந்த சந்தர்ப்பத்திலும் எதற்காகவும் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.</u>

8.4. விண்ணப்பதாரிகள் ரூபா 1000/= பணத்தை இலங்கை வங்கி, தப்ரோபேன் கிளையின் **<u>இலக்கம் 7041318 எனும் சுகாதார அமைச்சின் செயலாளரின் பரீட்சைக் கட்டணம் அறவிடல் கணக்கிற்கு செலுத்தப்பட வேண்டும்</u>**. **<u>ஒவ்வொரு விண்ணப்பதாரரும் விண்ணப்பத்தை சமர்ப்பிக்க முன்</u>** ஏதேனும் இலங்கை வங்கிக் கிளையில் இந்த தொகையை செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், அதற்காக பெறப்பட்ட பற்றுச்சீட்டின் அச்சிடப்பட்ட இலக்கத்தை விண்ணப்பத்தின் உரிய இடத்தில் உள்ளிட்ட பிறகே தங்கள் விண்ணப்பத்தை இணையவழி ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும். **<u>இப்பணத்தை பணம் வைப்புச் செய்யும் இயந்திரம் ஊடாக அல்லது இணைய வங்கி சேவை மூலம் செலுத்தக்கூடாது.</u>** இக்கட்டணம் எக்காரணத்தைக் கொண்டும் மீண்டும் திருப்பித்தர மாட்டாது என்பதுடன் பிரிதொரு பரீட்சையொன்றுக்காக மாற்றம் செய்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. நீங்கள் மேற்படி கட்டணம் செலுத்தியதற்கான ஆதாரத்தை (பற்றுச்சீற்று) பாதுகாப்பாக தம்வசம் வைத்திருத்தல் வேண்டும் என்பதுடன், நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டால் அதன் போது **<u>அதனை கட்டாயமாக</u>** சமர்ப்பித்தல் வேண்டும். அதன்படி, விண்ணப்பத்தை சமர்ப்பித்த பிறகு பணம் செலுத்தப்பட்டமை கண்டறியப்பட்டால் அந்த விண்ணப்பதாரர்களும் பற்றுச்சீட்டை சமர்ப்பிக்கத் தவறிய விண்ணப்பதாரர்களும் ஆட்சேர்ப்புக்குத் தகுதியற்றவர்களாக கருதப்படுவார்கள்.

**8.5. சமர்ப்பிக்கப்பட்ட இணையவழி விண்ணப்பத்தின் பிரதி மற்றும் 05 இலக்கக் குறியீட்டைப் பெறல்**

(அ). இந்த வர்த்தமானி அறிவிப்பில் மற்றும் அதனுடன் இணைந்ததாக இணையவழி விண்ணப்பம் பூர்த்தி செய்வதற்கு இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ள அறிவுறுத்தல் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விடயங்களுக்கும் ஏற்ப விண்ணப்பத்தை வெற்றிகரமாகச் சமர்ப்பிக்கும் ஒவ்வொரு விண்ணப்பதாரருக்கும் விண்ணப்பம் முறையாக அனுப்பிய உடனேயே அதன் பிரதி மற்றும் தனித்துவமான 05 இலக்க குறியீடு பெறப்படும்.

(ஆ). ஒவ்வொரு விண்ணப்பதாரரும் கணினித் திரையில் தோன்றும் தமது விண்ணப்பத்தின் அச்சுப் பிரதியொன்றை (Print – out) எடுக்க வேண்டும். அதனை தபால் மூலம் அனுப்ப வேண்டிய அவசியமில்லை. விண்ணப்பத்தை சமர்ப்பித்த ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தான் இதற்காக விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டதற்கான முறையான மற்றும் சரியான ஒரே ஆதாரமாக இருப்பதால் அதனை பாதுகாப்பாக வைத்திருப்பது உங்கள் பொறுப்பாகும். அதுமட்டுமன்றி, 05 இலக்கங்களைக் கொண்ட குறியீட்டையும் பாதுகாப்பாக வைத்திருப்பதன் மூலம் நீங்கள் சமர்ப்பித்த விண்ணப்பத்தின் பிரதியை பின்னர் பெறலாம்.

(இ). ஏதாவது சந்தர்ப்பத்தில் விண்ணப்பம் சமர்ப்பித்த பிறகு அதன் நகல் அல்லது 05 இலக்கங்களைக் கொண்ட குறியீடு கிடைக்காத விண்ணப்பதார்கள் தங்கள் விண்ணப்பங்கள் முறையாக பதிவேற்றம் செய்யப்படவில்லை/ சமர்ப்பிக்கப் படவில்லை என்பதை புரிந்து கொள்ள வேண்டும். அத்தகைய நபர்கள் அனைவரும் விண்ணப்பம் சமர்ப்பிக்காத மாணவர்களாகவே கருதப்படுவார்கள். அதன்படி, அத்தகைய விண்ணப்பதாரர்கள் உடனடியாக கீழே பந்தி 8.6 இல் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி அல்லது /மற்றும் மின்னஞ்சல் ஊடாக **மனித வள முகாமைத்துவம் மற்றும் ஒருங்கிணைப்புப் பிரிவைத்** தொடர்பு கொண்டு 2024.04.25 ஆம் திகதிக்கு முன் தமது விண்ணப்பம் தொடர்பான சிக்கல்களைத் தீர்த்து, தமக்குரிய குறியீடு மற்றும் விண்ணப்பத்தின் நகல்களைப் பெற ஏற்பாடு செய்தல் வேண்டும். இது விண்ணப்பதாரியின் பொறுப்பாகும் என்பதை அவதானத்திற்கு உட்படுத்துகிறேன். எவ்வாறாயினும், இந்த அமைச்சிற்கு முறையாக அனுப்பப்படாத இணையவழி விண்ணப்பங்கள் தொடர்பாக 2024.04.25 ஆம் திகதிக்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் எவ்வித கோரிக்கைகளும் கருத்தில் கொள்ளப்பட மாட்டாது.

(இ). மேலும், விண்ணப்பதாரர் ஒருவரினால் இந்த ஆட்சேர்ப்பு தொடர்பான எந்தவொரு விடயம் தொடர்பாகவும் செய்யப்படும் கோரிக்கைகள் தமது விண்ணப்பத்தின் பிரதியுடன் அனுப்பப்படல் வேண்டும் என்பதுடன், அதற்கு மாறாக சமர்ப்பிக்கும் எந்தவொரு கோரிக்கையும் கருத்தில் கொள்ளப்பட மாட்டாது என்பதை மேலும் அவதானத்திற்கு உட்படுத்துகிறேன்.

**8.6. அத்தியவசிய தகவல்களுக்காக விசாரித்தல்**

(அ). இக்கற்கைக்கு விண்ணப்பிப்பதற்கான அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் விண்ணப்பத்தை பூர்த்தி செய்வதில் ஏதேனும் சிக்கல்கள் எழுந்தால் அது தொடர்பாக தொழில்நுட்ப உதவிகளுக்கு அல்லது மேலே பந்தி 8.5 (இ) இல் குறிப்பிடப்பட்ட சிக்கல்களைத் தீர்ப்பதற்காக மட்டும் **வாரத்தின் வேலை நாட்களில் மு.ப 9.00 தொடக்கம் 4.00 வரை** சுகாதார அமைச்சின் **மனித வள முகாமைத்துவம் மற்றும் ஒருங்கிணைப்புப் பிரிவின் 0112 340 007** எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். **hrcodmoh@gmail.com** என்ற மின்னஞ்சல் முகவரியிலும் தொடர்பு கொள்ளலாம். **(மின்னஞ்சல் ஊடாக தொடர்பு கொள்ளும்போது எப்போதும் உங்கள் தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் தொலைபேசி இலக்கத்தை குறிப்பிடுவது கட்டாயமாகும்.)**

(ஆ). சம்பந்தப்பட்ட அனைத்து விபரங்களும் இந்த வர்த்தமானி அறிவித்தலில் மற்றும் சுகாதார அமைச்சின் இணையத்தளத்தில் விரிவாக குறிப்பிடப்பட்டுள்ளதுடன், ஏனைய விடயங்கள் தொடர்பாக விசாரிப்பதை தவிர்க்கவும்.

**09. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்:**

9.1. இலங்கை நிருவாக சேவையில் உள்ள உத்தியோகத்தர்/ இலங்கை கல்விச் சேவையிலுள்ள உத்தியோகத்தர்/ இலங்கை கணக்காளர் சேவையில் உள்ள உத்தியோகத்தர்/அரச பாடசாலையொன்றின் அதிபர்/ சமாதான நீதவான்/ சட்டத்தரணி அல்லது வருடாந்த சம்பளம் 512148/= ரூபாவிற்கு குறையாத சம்பளம் பெறும் நிரந்தர ஓய்வூதியம் பெறக்கூடிய பதவியில் உள்ள அரச உத்தியோகத்தர் ஒருவரினால் விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

ceylonvacancy.com

9.2. இந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளுக்கு இணங்காத மற்றும் பூரணமற்ற விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தல்களும் இன்றி நிராகரிக்காப்படும்.

**10. நேர்முகப்பரீட்சைக்கு நீங்கள் அழைக்கப்பட்டால் சமர்ப்பிக்க வேண்டிய விபரங்கள் :**

10.1. நீங்கள் வெற்றிகரமாக பதிவேற்றிய இணையவழி விண்ணப்பங்களுக்கு அமைய குறைந்தபட்ச கல்வித் தகைமையை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களுள் Z பெறுமதிக்கு அமைய தயாரிக்கப்பட்ட முதன்மை பட்டியலொன்றை அடிப்படையாகக் கொண்டு தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் மாத்திரம் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். சுகாதார அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபையினால் ஒவ்வொரு பதவிக்குரித்தான ஆட்சேர்ப்புத் திட்டத்தில் மற்றும் இந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் மற்றும் உடற்தகைமைகள் என்பன பரிசீலிக்கப்படும். நேர்முகப் பரீட்சையின் போது விண்ணப்பதாரர்கள் பின்வரும் ஆவணங்களின் **மூலப்பிரதிகளை** சமர்ப்பித்தல் வேண்டும்.

தவிர்க்க முடியாத காரணத்தினால் (நேர்முக சபையினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய) விண்ணப்பதாரர் ஒருவருக்கு ஏதாவது சான்றிதழ்/ ஆவணத்தை அன்றைய தினத்தில் சமர்ப்பிக்க முடியாதவிடத்து நேர்முகப்பரீட்சை சபையின் அறிவுறுத்தல்களுக்கு அமைய அந்த சான்றிதழ்/ஆவணத்தை நேர்முகப்பரீட்சை நடைபெற்ற தினத்திலிருந்து 07 நாட்களுக்குள் இந்த அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம்) III இற்கு நேரில் கொண்டு வந்து கையளிக்க வேண்டும் என்பதுடன், அவ்வாறு செய்வதற்கு தவறும் அனைத்து விண்ணப்பதாரர்களும் இந்த தேர்வுக்குத் தகுதியற்றவர்களாகக் கருதப்படுவார்கள்.

10.2. இணையத்தளத்தின் ஊடாக பதிவேற்றம் (UPLOAD) செய்யப்பட்ட விண்ணப்பத்தின் அச்சுப்பிரதி (9.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர் ஒருவரினால் சான்றுறுதி செய்யப்பட்ட)

10.3. பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்.

10.4. க.பொ.த (உ.தர) பரீட்சைப் பெறுபேறு மற்றும் Z பெறுமானத்தைக் குறிக்கும் சான்றிதழ் (பரீட்சை திணைக்களத்தினால் வழங்கப்பட்ட)

10.5. க.பொ.த (சா.தர) பரீட்சை பெறுபேறு (பரீட்சை திணைக்களத்தினால் வழங்கப்பட்ட)

10.6. ஆட்பதிவு திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியாகும் **உள்நாட்டு** சாரதி அனுமதிப்பத்திரம்

10.7. ரூபா 1000/= பணத்தை வங்கிக்கு செலுத்தியமைக்கான ரசீது.

10.8. வதிவிடத்தை உறுதிப்படுத்துவதற்கான கிராம சேவை அலுவலரினால் வழங்கப்பட்ட வதிவு தொடர்பான சான்றிதழ் (DS- 04)

10.9. மாணவர் பணி காட்டி (பாடசாலை விடுகைப் பத்திரம் - கல்வி B 59 பொது படிவம்)

10.10. மேலே 6.5 துணைப் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருமணம் ஆகவில்லை அல்லது விவாகரத்து செய்யவில்லை என்பதை நிருபிக்க சமாதான நீதவான் முன்னிலையில் 50/= ரூபா முத்திரையில் கையெழுத்திட்ட உறுதிமொழி. (இது பாடசாலை பற்சிகிச்சையாளர் கற்கை நெறிக்கு மட்டுமே பொருந்தும்)

10.11. மேலே 6 வது பந்தியின் 6.1 முதல் 6.4 வரையான துணைப் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளபடி தகுதியற்ற ஒருவர் அல்ல என்பதை உறுதிப்படுத்துவதற்கான உறுதிமொழி.

குறிப்பு :

ceylonvacancy.com

(அ). **மேலே 10.2 தொடக்கம் 10.11** வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் தம்மால் சான்றுறுதி செய்யப்பட்ட நிழற்பிரதிகள் நேர்முகப்பரீட்சைக்கு வரும் போது கொண்டு வர வேண்டும்.

(ஆ). பயிற்சிக் கல்லூரிகளில் காணப்படும் இடவசதிகள் மற்றும் சேவை அவசியம் உட்பட 4.2 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை கருத்தில் கொண்டு, பயிற்சிக்கு இணைக்கப்படும் எண்ணிக்கை மற்றும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை என்பன சுகாதார அமைச்சின் செயலாளரினால் தீர்மானிக்கப்படும்.

(இ). நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் அனைவரும் பயிற்சிக்கு இணைக்கப்படுவதாக இந்த வர்த்தமானி அறிவித்தலில் எந்த இடத்திலும் அல்லது பந்தியிலும் குறிப்பிப்படவில்லை என்பதை கவனத்திற் கொள்ளல் வேண்டும்.

(ஈ). நேர்முகப் பரீட்சையின் பின்னர் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் தொடர்பான விபரங்கள் http://www.health.gov.lk எனும் **அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்படுவதுடன், எவருக்கும் தனிப்பட்ட முறையில் அறிவிக்கப்பட மாட்டாது.** எவ்வாறாயினும், அவ்வப்போது எழும் குறிப்பிட்ட தகவல்களைப் பற்றி தெரிவிக்க நேரிட்டால், நீங்கள் சமர்ப்பித்த விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கம் மற்றும் /அல்லது மின்னஞ்சல் முகவரியின் ஊடாக அறிவிக்கப்படும். எனவே, விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரியை மாற்றாமல், செயலில் வைத்திருப்பது உங்களின் பொறுப்பாகும். மேலும் மாற்றங்கள் அல்லது செயலற்று இருப்பதால் உரிய தகவல்கள் சரியான நேரத்தில் தெரிவிக்க முடியாமையினால் ஏற்படக்கூடிய பிரச்சனைகளுக்கு இந்த அமைச்சு பொறுப்பல்ல.

(உ). வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களுள் உரிய காலத்தில் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சைக்கு சமூகமளிக்காதவர்கள் அல்லது நேர்முகப் பரீட்சைக்கு உரிய தினத்தில் சமூகமளித்து உரிய தினத்தில் பதிவு செய்யாத விண்ணப்பதாரிகளினால் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட பிறகு கற்கை நெறியில் இணைவதற்காக சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீடுகள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

**11. பயிற்சித் திட்டம் :**

11.1. நேர்முகப் பரீட்சையின் பின்னர் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் இந்த கற்கை நெறியை தொடர்வதற்கு பயிற்சி கல்லூரிகளுக்கு உள்வாங்கப்படுவார்கள். கற்கை நெறிக்கான காலம் மற்றும் கற்க வேண்டிய மொழி என்பன இலக்கம் I அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

11.2. பயிற்சிக் கல்லூரிகளுக்கு இணைக்கப்படும் மாணவர்கள் பயிற்சிக் கல்லூரியில் வலுவில் உள்ள விதிமுறைகளுக்கும் மற்றும் சுகாதார அமைச்சினால் காலத்திற்குக் காலம் விதிக்கப்படும் ஏனைய விதிமுறைகளுக்கும் கட்டுப்படல் வேண்டும்.

11.3. பயிற்சிக்காலத்தில் நடாத்தப்படும் பரீட்சைகளில் சித்திபெறத் தவறும் அல்லது அவர்களின் வேலை மற்றும் நடத்தை என்பன திருத்திகரமாக இல்லாவிட்டால் அல்லது பரீட்சை மற்றும் லீவு நிபந்தனைகளை மீறும் அல்லது பயிற்சிக்கு இணைத்துக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்ட கல்வி மற்றும் ஏனைய தகைமைகளில் ஏதாவது உண்மைக்கு புறம்பானவை அல்லது பிழையானவையென தெரியவருமிடத்து பயிற்சியின் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எவ்வித நட்டஈடுகளும் இன்றி பயிற்சியிலிருந்து நீக்கப்படுவார்கள்.

11.4. பயிற்சிக் காலத்தில் மாணவர்களுக்கு அரச நிருவாக சுற்றறிக்கை 03/2016 இன் உப அட்டவணை V இன் நியதிகளுக்கு அமைய மாதாந்த கொடுப்பனவொன்று வழங்கப்படும்.

11.5. பயிற்சிக் கல்லூரிக்கு பயிற்சிக்காக உள்வாங்கப்படும் போது பயிற்சியை சிறப்பாக நிறைவு செய்வதாகவும், அப்பயிற்சியை இடைநடுவில் கைவிடுவதில்லை எனவும், அந்த பயிற்சியை முழுமையாக நிறைவு செய்த பின்னர் உரிய பதவிக்கு நியமனம் வழங்கப்பட்டால் குறைந்தபட்சம் பத்து வருடங்கள் (10) மத்திய / மாகாண அரச சேவையின் கீழ் உரிய பதவியில் சேவையாற்றுவதாகவும், சுகாதார செயலாளரினால் பரிந்துரைக்கப்படும் அதிகாரியுடன் ஒரு ஒப்பந்தத்திற்கு வர வேண்டும் என்பதுடன், உங்கள் பயிற்சி மற்றும் கட்டாய சேவைக் காலம் தொடர்பாக சுகாதார அமைச்சினால் சமர்ப்பிக்கப்படும் பிணைக்கு இரண்டு பிணையாளிகளுடன் உடன்பட வேண்டும். மேலே 11.3 இன் படி, பயிற்சியின் போது பயிற்சியிலிருந்து விலகினால், பயிற்சியை இடைநடுவில் கைவிட்டால், பயிற்சியிலிருந்து நீக்கப்பட்டால் அல்லது நியமனம் பெற்று பத்து (10) வருட காலம் மேற்படி உரிய பதவியில் சேவையாற்றுவதற்கு தவறினால் அவ்வாறான மாணவர்கள் பயிற்சியிலிருந்து/பதவியிலிருந்து நீக்கப்பட்டு இந்த காலத்தினுள் அவருக்கு அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட கொடுப்பனவுகள், அரசினால் செலவிடப்பட்ட செலவுகள் மற்றும் பிணைத் தொகை என்பவற்றை அவர் சுகாதார அமைச்சிற்கு செலுத்த வேண்டும். அவ்வாறு செய்யத்தவறினால் அப்பணத்தை அறவிடுவதற்கு ஒப்பந்தத்தின் பிரகாரம் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும்.

11.6. இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் விண்ணப்ப திகதியில் திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன், பயிற்சிக் காலத்திலும் திருமணம் புரியாமல் இருத்தல் கட்டாயமானதாகும்.

**12. சேவையில் ஈடுபடுத்தப்படும் நியதிகள் :**



ceylonvacancy.com

12.1. பயிற்சியின் பின்னர் நிரந்தர நியமனம் வழங்குவதற்கு அரசாங்கம் கடமைப்பட்டிருக்காது. எனினும், பயிற்சியை நிறைவு செய்யும் தினமாகும் போது நிலவுகின்ற வெற்றிடங்களுக்கு அமைய தயாரிக்கப்படும் முன்னுரிமை வெற்றிட பட்டியலுக்கு அமைய சிரேஷ்ட உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றங்கள் வழங்கிய பின்னர் எஞ்சிய வெற்றிடங்களுக்கு பயிற்சியை சிறப்பாக நிறைவு செய்து இறுதிப்பரீட்சையில் சித்தியடையும் பயிலுனர்களின் பயிற்சி நெறியின் இறுதிப்பரீட்சை திறமையை கருத்திற்கொண்டு உரிய பதவியின் III ஆம் தரத்தின் பதவிக்கு நியமிப்பது குறித்து பரிசீலிக்கப்படும். அத்துடன் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் நிலவுகின்ற வெற்றிடங்களுக்கு அமைய இலங்கையில் எப்பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கு கட்டுப்படல் வேண்டும்.

12.2. நியமனம் பெற்றவர்களுக்கு அரச நிர்வாக சுற்றறிக்கை 03/2016 இன் விதிமுறைகளுக்கு அமைய சம்பளம் வழங்கப்படும்.

12.3. விண்ணப்பத்தை நிரப்பும் போது கல்வி மற்றும் ஏனைய தகைமைகளை சரியாக உள்ளிட வேண்டும். பயிற்சிக்காக இணைத்துக் கொள்ளும் போது அல்லது நியமனம் பெற்ற பின்னர் மேற்படி சான்றிதழ்கள் பொய்யானவை என கண்டறியப்பட்டால், சட்டரீதியாக நடவடிக்கை எடுப்பதற்காக குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு சமர்ப்பிப்பதற்கும், வழங்கப்பட்ட நியமனம் இரத்து செய்யப்பட்டு பயிற்சியிலிருந்து/ பதவியிலிருந்து நீக்கப்படுவதோடு அது தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதுடன், மீண்டும் அரச சேவையில் இணைய முடியாதவாறு கருப்பு பட்டியலில் அவருடைய பெயர் உள்வாங்கப்படும். மேலும், பயிற்சிக் காலத்தில் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட கொடுப்பனவுகள், அரசினால் செலவிட்ட செலவினங்கள் மற்றும் ஒப்பந்த பணம் அவரிடமிருந்து அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

12.4. தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் பயிற்சியை தொடர்வதற்கு மற்றும் நாட்டின் எப்பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கு போதியளவு உடல் மற்றும் உள ஆரோக்கியம் கொண்டவராக இருப்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு பயிற்சியின் முதல் மாதத்திற்குள் மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதுடன், மருத்துவ பரிசோதனையில் தகுதியற்றவர் என காணப்படும் விண்ணப்பதாரிகள் பயிற்சியை தொடர தகுதியற்றவராக கருதப்படுவார்கள்.

12.5. மேற்படி இணைக்கப்படும் சகல உத்தியோகத்தர்களும் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக்கோவையின் சட்ட திட்டங்களுக்கும், அரச சேவைகள் ஆணைக்குழுவினால் அரச சேவைகள் தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் கட்டளைகளுக்கும், சேவைப் பிரமாணக்குறிப்பின் விதிமுறைகளுக்கும், அரச நிதி ஒழுங்கு விதிகளுக்கும், அரச சுற்றறிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல்களுக்கும் மற்றும் அவை தொடர்பாக காலத்திற்குக்காலம் விதிக்கப்படும் கட்டளைகள் மற்றும் திருத்தங்களுக்கும் கட்டுப்படல் வேண்டும்.

12.6. பயிற்சிக்கு இணைக்கப்படும் விண்ணப்பதாரிகளுக்கு பயிற்சி கல்லூரிகளில் தங்குமிட வசதிகள் வழங்குவதற்கு இந்த அமைச்சு கட்டுப்பட்டில்லை. அவ்வாறு வழங்கப்பட்டால் அதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட தங்குமிட அறைக்கான வாடகை, நீர் மற்றும் மின்சார கட்டணம் அறவிடப்படும்.

12.7. இப்பயிற்சிக் காலத்தினுள் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுதல் அல்லது தனியார் சேவையில் ஈடுபடுவதற்கான எவ்வித உரிமைகளும் இல்லை.

12.8. பயிற்சிக்கான ஆட்சேர்ப்பு தொடர்பாக இந்த வர்த்தமானி அறிவித்தல் மூலம் உள்வாங்கப்பட்ட அல்லது உள்வாங்கப்படாத ஏதேனுமோர் விடயம் தொடர்பாக சிக்கல்கள் தோன்றினால், அது தொடர்பாக சுகாதார அமைச்சின் செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதித்தீர்மானமாகும். இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் முரண்பாடுகள் ஏற்படுமிடத்து, சிங்கள மொழியே வலுவில் இருக்கும்.

டாக்டர் பீ.ஜீ.மஹீபால,
செயலாளர்,
சுகாதார அமைச்சு.

2024 .03.12....... ஆந் திகதி
"சுவசிறிபாய",
385, சங்கைக்குரிய பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை,
கொழும்பு – 10.